අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## வினாத்தாள் I, II & III



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 22 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**தமிழ் மொழியும் இலக்கியமும் - I, II** | **நேரம் : 3 மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## தமிழ் மொழியும் இலக்கியமும் - I

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

- **தடித்த எழுத்தில்** அமைந்த சொல்லுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. "நண்ணுறப்பெறல் திண்ணமதாமென" இங்கு **திண்ணம்** என்பது
   (1) நன்மை (2) உறுதி (3) உண்மை (4) நேர்மை

2. "குரவரையும் கிளைஞரையும் குலத்துரிய" இங்கு **கிளைஞர்** என்பதன் கருத்து
   (1) உறவினர் (2) நண்பர் (3) பகைவர் (4) சான்றோர்

3. "தனித்து நின்றும் சத்தியத்தால் தலை நிமிரும் மனிதன்" இங்கு **சத்தியம்** என்பதன் எதிர்க்கருத்து
   (1) உண்மை (2) வண்மை (3) அசத்தியம் (4) நித்தியம்

4. "வள்ள லடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ" இங்கு **வள்ளல்** என்பதன் எதிர்க்கருத்து
   (1) புங்கவர் (2) புரவலன் (3) மேதாவி (4) உலோபி

5. "மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே" இதில் **அப்பு** என்பது
   (1) முதியவர் (2) அக்கினி (3) நீர் (4) காற்று

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

6. பொருத்தமற்ற சொற்களின் இணைவு
   (1) களிறு - பிடி (2) குண்டு - பிணா (3) கடுவன் - மந்தி (4) கலை - பிணை

7. பட்ஜட் (BUDJET) என்பதன் தமிழ் வடிவம்
   (1) எண்மானம் (2) கேள்வி (3) பெறுமதி (4) பாதீடு

8. கவின், எழில், அணி எனும் பொருளைத் தரும் சொல்
   (1) வனப்பு (2) இயற்கை (3) உதயம் (4) காப்பு

9. ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொதுவான எழுத்துக்களால் வழங்கும் சொல்
   (1) தற்சமம் (2) தற்பவம் (3) மணிப் பிரவாளம் (4) மங்கலம்

10. நாவலர் தமிழைத் துறைபோகக் கற்றார். இங்கு துறைபோதல் என்பது
(1) கூர்ந்து கற்றல் (2) விளங்கிக் கற்றல்
(3) ஐயந்திரிபறக் கற்றல் (4) மேலெழுந்தவாரியாகக் கற்றல்

11. யார் துணையுமின்றித் தனித்து நின்று வெற்றி பெறுபவன்
(1) சிரஞ்சீவி (2) அசகாயசூரன் (3) நரகாசுரன் (4) அரசன்

12. கன்று என்னும் சொல்லால் குறிக்கும் வழக்கமற்றது
(1) மா (2) பசு (3) பலா (4) நெல்

13. கண்ணோடுதல் என்ற மரபுத்தொடராற் குறிக்கப்படுவது
(1) விட்டுக்கொடுத்தல் (2) தட்டிக்கொடுத்தல்
(3) பாசாங்குசெய்தல் (4) இரங்குதல்

14. புதிதாகச் செய்யப்பட்ட தேரை முதன்முதலில் செலுத்திப்பார்த்தல்
(1) வெள்ளோட்டம் (2) பரீட்சார்த்தம்
(3) ஒத்திகை (4) அரங்கேற்றம்

15. பயனற்றது என்ற கருத்தைத் தராத பழமொழி
(1) ஆற்றிற் கரைத்த புளி போல
(2) செவிடன் காதில் ஊதிய சங்கு போல
(3) குன்றிலிட்ட விளக்குப் போல
(4) புறக்குடத்தில் வார்த்த நீர் போல

16. “உப்பிட்டவரை உள்ளளவும் நினை” என்ற பழமொழியின் கருத்து
(1) விருந்தோம்பல் (2) நன்றியுணர்வு (3) நடுவு நிலைமை (4) ஒப்புரவு

17. பின்வருவனவற்றுள் வேறுபட்ட கருத்தைத்தரும் இணைமொழி
(1) வாடிவதங்கி (2) மூலைமுடுக்கு (3) மேடுபள்ளம் (4) ஒட்டியுலர்ந்து

18. அ) உரம் இறக்குமதி செய்யப்பட்டது.
ஆ) விவசாயிகளின் பிரச்சினை தீரவில்லை.
மேற்படி வாக்கியங்களை இதே ஒழுங்கில் இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
(1) ஆகவே (2) அதனால் (3) ஆதலால் (4) ஆனாலும்

19. பின்வருவனவற்றுள் வினையடியாகப் பிறந்த பெயர்ச்சொல்
(1) அறிஞன் (2) வலைஞன் (3) அழகன் (4) உத்தமன்

20. “நண்பர் அவுக்கென எழும்பி இரண்டில் ஒன்று பார்ப்பது என்று பாய்ந்து வந்தார்” இங்கு இடம்பெற்றுள்ள ஒலிக்குறிப்புச் சொல்
(1) இரண்டு (2) அவுக்கென (3) வந்தார் (4) பாய்ந்து

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

21. சகரம் ஆங்கில எழுத்து “CH” என்பதற்கு நிகராக ஒலிப்பது
(1) பச்சை (2) பசை (3) சட்டி (4) சங்கு

22. பின்வருவனவற்றுள் எதிர்காலங் காட்டும் பகுபத உறுப்பு
(1) பகுதி (2) சாரியை (3) சந்தி (4) விகுதி

23. பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயரடையாக அமைவது
(1) விரைந்து (2) கரிய (3) அழகான (4) அழகாக

24. பின்வருவனவற்றுள் பண்புத்தொகையாக அமைவது
(1) குளக்கரை (2) முத்தமிழ் (3) ஓடுபாதை (4) கிழக்கு வானம்

25. பின்வருவனற்றுள் இயல்புப் புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) நாங்கள் (2) கல்லெறிந்தான் (3) பாலாடை (4) நீலவானம்

26. "குருவி கூட்டால் பறந்தது" இதில் ஆல் உருபு உணர்த்தும் வேற்றுமைப் பொருள்
(1) நீங்கற்பொருள் (2) கருவிப்பொருள்
(3) மூலப்பொருள் (4) காரணப்பொருள்

27. பின்வருவனவற்றுள் காலங்காட்டும் தொழிற் பெயர்
(1) இரைதல் (2) ஓடியது (3) பாடல் (4) படித்தல்

28. "முன்றிலில் நின்று கதைத்தார்கள்" என்பதில் முன்றில் என்பது
(1) போலி (2) தகுதி வழக்கு (3) இயல்பு வழக்கு (4) குழூஉக்குறி

- **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

29.

(1) இடுகுறிப் பெயர் :- நீர், மரம், பனை

(2) காரண இடுகுறிப் பெயர் :- கறங்கு, முள்ளி, நாற்காலி

(3) வினையாலணையும் பெயர் :- படித்தவன், நடந்தவனை, சென்றவன்

(4) ஆக்கப் பெயர் :- படிப்பு, பருப்பு, விருந்தாளி

30.

(1) கூட்டுவினை :- வந்துவிட்டான், ஆசைப்பட்டான், எழுதிக்காட்டினான்

(2) பிறவினை :- பருக்கினான், தொடக்கினான், வளைத்தாள்

(3) தனிவினை :- பாடினான், நாடினாள், வெற்றிபெற்றான்

(4) வியங்கோள்வினை :- வாழட்டும், வாழிய, எழுதுக

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

31. உள்ளூராட்சித் தேர்தலில் சுயேட்சையாகப் பல .................... போட்டியிடுகின்றனர்
(1) வாக்காளர்கள் (2) வேட்பாளர்கள்
(3) உறுப்பினர்கள் (4) பிரமுகர்கள்

32. அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வைக் கட்டுப்படுத்த ஆணைக்குழு செய்த ................... அரசாங்கத்தால் பரிசீலனை செய்யப்பட்டது.
(1) ஆய்வுரை (2) மதிப்புரை (3) முன்னுரை (4) பரிந்துரை

33. வெளிநாடுகளுக்கு வேலைதேடிச் சென்றவர்களால் அரசுக்கு அந்நிய .................... அதிகம் கிடைப்பதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.
(1) செலாவணி (2) நன்கொடை (3) மானியம் (4) உதவி

34. வங்கி முகாமையாளரின் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி ................... விழா கொண்டாடப்பட்டது.
(1) வைரவிழா (2) வச்சிரவிழா (3) மணிவிழா (4) மிலேனியவிழா

35. தனியார் பல்கலைக் கழகங்களை நாட்டில் நிறுவுவது தொடர்பாக ................... ஒன்று பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்பட்டது.
(1) வெள்ளையறிக்கை (2) உடன்படிக்கை
(3) ஒப்பந்தம் (4) பிரேரணை

36. அந்த நூல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ................... பெருஞ்சலசலப்பை ஏற்படுத்தியது.
(1) அணிந்துரை (2) திறனாய்வு (3) பாயிரம் (4) நூன்முகம்

- பின்வரும் பாடலை அடிப்படையாகக்கொண்டு 37 தொடக்கம் 39 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

சூதும் வாதும் நிறைந்த பூதலமீது நல்லார்
ஓதும் வழிநடந்தால் யாதும் துயரமில்லை
ஏதும் சந்தேகம் உளதோ? - நெஞ்சே! இதில்
தீது சிறிதுமுளதோ?

கூழுமில்லாது நாட்கள் ஏழும் பசித்துன்பமே
சூழும்படியே பிறர் தாழும் நிலை தவிர்க்க
வாழும் முறைமை சொல்வார்! - நெஞ்சே! நல்லவர்
பாழும் இருளைக் கொல்வார்.

37. நல்லார் ஓதும்வழி நடந்தால் யாது நிகழும் எனக் கவிஞர் கூறுகிறார்.

(1) இருள் களையப்படும்

(2) சந்தேகம் ஏற்படும்

(3) துன்பம் நேராது

(4) ஏழுநாளும் பாசியுண்டாகாது

38. இப்பாடலில் இடம்பெறும் உருவகம் யாது?

(1) பசித்துன்பம் (2) பாழுமிருள் (3) தாழும்நிலை (4) ஓதும்வழி

39. இப்பாடலோடு பொருந்தி வராத கருத்து.

(1) நல்லார் கூறும் வழிநடந்தால் துன்பமில்லை

(2) இப்பூவுலகம் நன்மைகளால் மட்டும் நிறைந்துள்ளது

(3) இப்பூவுலகம் சூதுவாதால் நிரம்பியுள்ளது

(4) நல்லவர்கள் கொடிய இருளையகற்றுவர்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ. பழமொழிகளை யார் எப்பொழுது இயற்றினர் என்று சொல்லமுடியாது.
ஆ. அவை அவ்வப்போதைய தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்துவிட்டு மறைந்து போகின்றன.
இ. அத்தகைய வாக்கியங்களே பழமொழிகள்.
ஈ. நாம் நாள்தோறும் பேசும் வாக்கியங்கள் அவ்வப்போது எம்மால் அமைக்கப்படுகின்றன.
உ. எனினும் சிற்சில வாக்கியங்கள் பொருட் சிறப்பு மிக்கவையாகப் பிறந்து மீண்டும் மீண்டும் எடுத்தாளப்படும் தகுதியைப் பெற்றுவிடுகின்றன.

(1) ஆ உ இ அ ஈ.

(2) இ ஈ அ உ ஆ

(3) அ ஆ உ ஈ இ

(4) ஈ. ஆ உ இ அ

**

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 22 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் - I, II**

**தமிழ் மொழியும் இலக்கியமும் - II**

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

***1.*** சுருக்கமான விடை எழுதுக.

(i) "அறந்தானே யென்கின்ற வயனின்றா டனைநோக்கி"
இத்தொடரைச் சந்தி பிரித்தெழுதுக.

(ii) 'கரை' எனும் சொல் பெயராகவும் வினையாகவும் அமைந்து வருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

(iii) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளையிட்டு அதனை மீண்டும் எழுதுக.
ஏன் மோனே நீ உன்ரை மச்சாளிடம் பேசிறாயில்லையாம்

(iv) 'படிக்கவிடாமல் உந்த அருமந்த பிள்ளையை நீ அநியாயமாக்கப் போகிறாய்'
என்பதில் மரூஉ ஆக அமைந்த சொல்.

(v) பொதுப் பணிகளில் பங்குபற்றாது பார்வையாளனாக இருப்பதை அவமானம் எனக் கருதினான் மாணவன்.
இவ்வாக்கியத்திலுள்ள முன்னொட்டு, பின்னொட்டு ஏற்ற சொற்களை எழுதுக.

(vi) மீனவர்களும் கடல்சார் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுபவர்களும் பாதுகாப்பான இடத்தை அண்மித்ததாகவே தமது பணிகளில் ஈடுபட வேண்டும் ஏனெனில் நாளை பெருமழையும் புயற்காற்றும் கடற் கொந்தளிப்பும் ஏற்படலாம்.
இதிலுள்ள அறிவித்தல், அறிவுறுத்தல் என்பவற்றை எழுதுக.

(vii) பின்வருவனவற்றுள் அகப்புணர்ச்சியாய் அமைந்தவற்றைத் தெரிந்து எழுதுக.
(என்னை, பூங்கொடி, கல்லெறிந்தான், மாணவர்கள், ஆழ்மனது)

(viii) 'யானைகள் காடுகளை அழித்தன' எனும் செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றியெழுதுக.

(ix) 'கோபங்கொண்ட அவளது கண்களிலிருந்து திண்மையொளி வெளிவந்தது' இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளை எழுதுக.

(x) 'ஒரு வயது சென்ற கிழவன் வீதியில் நின்றான்' எனும் வாக்கியத்தில் காணப்படும் மயக்கத்தை நீக்கி எழுதுக.

(02 x 10 = 20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(i) நமது நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் புரிவோர் தொகை அதிகரித்து வருகிறது. தொழில்சார் நிபுணர்கள் முதல் கூலித் தொழிலாளர்கள் வரையிலே இவ்வாறு வெளிநாடு செல்கின்றனர். அதனால் நமது நாட்டின் அந்நியச் செலாவணி அதிகரிக்கின்றது. குடும்பங்கள் பொருளாதார நிலையில் உயர்ச்சி காண்கின்றன. எனினும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை நாடுவதால் பல எதிர்விளைவுகளும் ஏற்படவே செய்கின்றன. இவ் வெளிநாட்டுப் பிரயாண மோகத்தினால் குடும்பச் சிதைவுகள், பண்பாட்டுச் சீரழிவுகள் என்பனவும் அவற்றுள் முக்கியமானவை எனும் விடயங்களை அடிப்படையாகக் கொண்ட **விளக்கக் கட்டுரை.**

(ii) சினிமாவானது மனித வாழ்க்கைக் கோலத்தையும், யதார்த்த வாழ்வையும் மையமாகக் கொண்டு இயங்குகின்றதென்ற கருத்துடைய ஒருவருக்கும், சினிமா வர்த்தக நோக்கத்பை் பிரதானப்படுத்துவது அத்தகைய பின்னணியில் வெளிவரும் சினிமாக்களே மக்களைப் பெரிதும் கவர்கின்றன என்ற கொள்கையுடைய மற்றொருவருக்கும் இடையிலான **உரையாடல்.**

(iii) வாழ்வின் அத்திவாரம் ஆரோக்கியம், ஆரோக்கியத்திற்கு அவசியமாக அமைபவை உணவுப் பழக்கவழக்கம், உடற்பயிற்சி, போதுமான ஓய்வு, சிறந்த பொழுதுபோக்கு முதலான வாழ்க்கை நடைமுறைகளாகும். ஆரேக்கியமான உடலிருந்தாற்றான் ஆற்றல்மிகு செயற்றிறனை வெளிப்படுத்த முடியும். இவற்றினை வலியுறுத்தும் ஒரு **மேடைப்பேச்சு.**

(iv) "சிறு வயதிலிருந்தே கல்வியில் ஈடுபாடு கொண்டு தனது கடின முயற்சியாற் படித்துப் பட்டம் பெற்று கௌரவம் மிக்க வாழ்வை அமைக்க விரும்பி தனதெண்ணம் போலவே அனைத்திலும் வெற்றி பெற்று இரண்டு மாதங்கள் மட்டுமே அரச உத்தியோகம் செய்து மகிழ்ந்திருந்த கண்ணனின் வாழ்வு இலங்கையின் நிலை தளர்ந்த பொருளாதாரப் புயற்காற்றில் அகப்பட்டு திசை மாறியது. இதனால் ..." என்று தொடங்கும் வகையில் அமைந்த **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

வாழ்க்கை என்பது ஊண், உடை, உறையுள் முதலியவற்றைத் தேடிப்பெறும் முயற்சியில் தொடங்குவது. சமைத்து உண்ணல், நெய்து உடுத்தல், வீடு அமைத்து வாழ்தல், தற்காப்புக்காகப் பல கருவிகள் இயற்றிக் கொள்ளல் முதலியன வாழ்க்கையின் முதற்படியில் நிகழ்வன. அந்நிலையில் பொருளே வாழ்க்கையின் நோக்கமாகவும் நாட்டமாகவும் அமையும். பொருளால் அதாவது ஊண், உடை முதலியவைகளால் இன்பம் பெற முயன்று அலைந்து அலைந்து வாடிய பின், மக்கள் வாழ்க்கையின் இரண்டாவது படியினை எய்துவார். உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும், இருக்கும் இடத்திற்கும் போராட வேண்டிய வறுமையில் சிக்குண்டு வருந்தும் மக்கள் இரண்டாம் படியினை எய்தார். கஞ்சிக் கவலை மிகுந்த நாட்டில் கலைக் கவலை எழாது. கடவுட் கவலையும் தோன்றாது. பசித் துன்பம் அலைக்கும் நாடு பண்பாடு எய்தாது. வேண்டிய உணவும் பெற்று, உடையும் பெற்று, இடம் முதலியனவும் பெற்றவரே இரண்டாம் படியை எய்தும் தகுதி வாய்ந்தவர்.

தமிழ்ச் சான்றோர் ஊர்களைப் புகழத் தொடங்கிய போது மாடமாளிகையும் பிறவும் பற்றிப் புகழ்ந்துரைத்ததில் ஊக்கங் கொள்ளாமல் பசி என்பது அறியா ஊர்கள் என்று புகழ்ந்த திறன் போற்றத்தக்கது. ஆதலின் வறுமை அற்ற நாடே முன்னேற்றத்திற்குத் தகுதியுற்ற நாடாகும். அந்நாட்டு மக்களே வயிற்று வாழ்வு என்னும் முதற்படியிலிருந்து கலை வாழ்வு என்னும் இரண்டாம் படிக்கும் உயரவல்லவர். ஏனையோர் கலை கலை என்று முழங்குதல் ஆரவாரமே அன்றிச் சிறிதும் பயன்படாதது. இரண்டாம் நிலை உற்ற மக்கள் வயிற்றுக் கவலை அற்றவராய் புலன்களுக்குச் சிறந்த விருந்து தேடி அவற்றின் வாயிலாக இன்பம் பெற முயல்வர். கண்ணுக்கு இனிய காட்சியாக ஓவியம் சிற்பம் நாடகம் முதலியன தேடுவர். செவிக்கு இனிய விருந்தாக இசை, காவியம் கதை முதலியன நாடுவர். அவ்வாறே மற்றப் புலன்களுக்கும் ஏற்ற விருந்து விழைந்து தேடுவர். அந்நிலையில் கலை வளர்ச்சியே மக்களின் வாழ்க்கையாக அமையும்.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மனிதன் இயற்கையில் ஒருமித்து வாழும் தன்மையுடையவன். பிறர் உதவியின்றி எதையும் சாதிப்பது இயலாததாகையால் அவன் தனித்து வாழ முடியாது. குகைகளில் வசித்து வந்த ஆதி மனிதன் கூடத் தன் தினசரி வாழ்க்கையை நடத்துவதற்கு ஒரு பெண்ணை வாழ்க்கைத் துணையாகக் கெண்டான். மற்றவர்களுடன் சேர்ந்து வாழ்வது மனிதனின் இயல்பு. இதனால் அவனிடத்து இனநோக்கு உண்டானது. பழக்கவழக்கங்கள் விருத்தியடைந்தன. ஒரு தலைவனுக்கு அமையவும் முதியோரின் புத்திமதியைக் கேட்கவும் பழகிக் கொண்டான். உணவுக்காக காட்டு மிருகங்களை வேட்டையாட வேண்டியதாயிற்று. பின்னர் மிருகங்களை வளர்த்து வாழ்க்கை நடத்தினான், நீர் வளமுள்ள ஆற்றோரங்களிலும் குளக்கரைகளிலும் உணவுப் பயிர்களை உண்டாக்கி, நிரந்தரமான வீடமைத்து வாழ்ந்து வந்தான். இவ்வாறு அவனுடைய நாடோடிச் சீவியம் நீங்க, நிலைபேறான கிராம வாழ்க்கை தொடங்கிற்று.

வேளாண்மையின் பயனாக நிரந்தரமாக வீடமைத்து வாழும் கூட்டுச் சமூக வாழ்க்கை உண்டானது. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் ஒவ்வொரு தொழிலுடைய பல்வேறு சமூகங்கள் தோன்றலாயின. கமக்காரர் வயல்களைப் பண்படுத்தி வேளான்மை செய்தனர். இடையர் மந்தைகளை வளர்த்தார்கள். தச்சரும் கம்மாளரும் கலப்பை முதலான ஆயுதங்களைச் செய்து வந்தனர். இவ்வாறே ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு தொழிலைச் செய்தார்கள். ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது நிலையினை உயர்த்திக் கொள்வதற்காக வேறு தொழிலில் ஈடுபடக்கூடாது. இது பற்றியே சாதிக் கட்டுப்பாடு ஏற்பட்டது.

(அ) மனிதன் தனித்து வாழ முடியாமைக்குக் கூறப்படும் காரணம் யாது?

(ஆ) ஏன் மனிதனிடம் இனநோக்கு உண்டானது?

(இ) நிலைபேறான கிராம வாழ்க்கை எப்போது உருவானது?

(ஈ) சாதிக் கட்டுப்பாடு எவ்வாறு ஏற்பட்டது?

(உ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வெவ்வேறு சமூகத்தவர்களை எடுத்துக் காட்டுக.

(10 புள்ளிகள்)

5. எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்ட விலைவாசி உயர்வால் மக்கள் தம் அன்றாட வாழ்வை முன்னெடுத்துச் செல்வதில் பெரும் இடர்களை எதிர்நோக்குகின்றனர். இவ் விலையுயர்வு மாணவ சமூகத்தையும் அவர் கல்வியையும் பாதித்ததோடு அல்லாமல் மாணவர் இடைவிலகலையும் அதிகரிக்கச் செய்திருக்கிறது. இந்நிலைமையை மாற்றியமைக்கக் கூடியதாகப் பின்வரும் விடயங்களை உள்ளடக்கி "சமூக ஒளி"ப் பத்திரிகையின் ஆசிரியருக்கு, ஊற்றூர்க் கிராமத்தின் கலங்கரை வித்தியாலயத்தின் சிரேஷ்ட்ட மாணவ முதல்வனான அ.ஆரூரன் என உம்மைக் கருதிக்கொண்டு **100** சொற்களில் அமையுமாறு ஒரு **கடிதம்** எழுதுக.

⇒ பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள்
⇒ மாணவர் சமூகத்தைப் பாதித்த விதம்
⇒ நிவர்த்தி செய்வதற்கான தீர்வுகள்

**அல்லது**

போதைப் பொருட்பாவனை நாட்டை அச்சுறுத்தும் பாரிய பிரச்சினையாகத் தலையெடுத்துள்ளது. இதன் தாக்கத்திலிருந்து இளைஞர் சமூகத்தை விடுவிப்பதற்காகச் சயனபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் **100** சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** வரைக.

(15 புள்ளிகள்)

✳✳✳

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 22 | T | III |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**தமிழ் மொழியும் இலக்கியமும் - III** **நேரம் : 2 மணித்தியாலம்**

## தமிழ் மொழியும் இலக்கியமும் - III

**அறிவுறுத்தல்கள் :**

* அறிவுறுத்தல்களுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* ***1, 2, 3, 4*** ஆகிய வினாக்களுக்கும் ***5, 6, 7*** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் ***80*** ஆகும்.

***1.*** சுருக்கமான விடை தருக.

(i) "மாக மடங்கலும் மால் விடையும் பொன்
நாகமும் நாகமும் நாண நடந்தார்"

(அ) இதில் மடங்கல் என்பதன் பொருள் யாது?

(ஆ) நாகமும் நாகமும் என்பதிலுள்ள அணி யாது?

(ii) "ஐவராம் அவனிபர்க்கும் நினைனவு ஏது என்று
அருள் புரிந்தான் அமரர் கோமான்"

(அ) "ஐவராம் அவனிபர்க்கு" என்பதில் அடங்குபவர்களின் பெயர்களைத் தருக.

(ஆ) அமரர் கோமான் என்பது யாரைச் சுட்டுகிறது?

(iii) சீரெடுத்த புலையியற் சாரர்கள்
தேசபக்தர் வரவினைக் காத்தல் போல்

(அ) இதில் இடம்பெற்றுள்ள உவமானம் யாது?

(ஆ) சீர் என்பதன் கருத்து யாது?

(iv) "அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே"

(அ) தமியர் என்பது குறிக்கும் பொருளை எழுதுக.

(ஆ) அமிழ்தத்தின் சிறப்பு யாது?

(v) "செய்தி யாழின் பகுதியொடுதொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிவ"

(அ) இவ்வாறு கூறும் நூல் எது?

(ஆ) இச்சூத்திரம் எத்திணையியலில் இடம் பெற்றுள்ளது?

(vi) “அப்ப ஏன்கா நம்மட உம்மா மவுத்தாப்போன அன்டெக்கி இது கத்தல்ல.”

(அ) இக்கூற்று இடம்பெறும் சிறுகதை இடம்பெற்றுள்ள தொகுப்பு யாது?

(ஆ) இதிலுள்ள “மௌத்து” என்பது எம்மொழிச் சொல்

(vii) “நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற் கொண்ட கல்லா விளமை”

(அ) நெடுநீர் என்பதன் பொருள் யாது?

(ஆ) “கல்லாவிளமை” என்பது குறித்து நிற்கும் பொருளை எழுதுக.

(viii) சூல்கொண்ட கருமேகம் அன்பிற்காக ஏங்கும் ஒரு பெண்ணின் நம்பிக்கையின் குறியீடாகக் காட்டப்படுகின்றது.

(அ) இக்குறியீட்டைக் கொண்ட திரைப்படத்தின் பெயரை எழுதுக.

(ஆ) இதன் இயக்குநர் பெயரைக் குறிப்பிடுக.

(ix) “பொய்கை ஊரன் கேண்மை
செய்துஇன் புற்றனெம் செறிந்தன வளையே”

(அ) இதில் எச்சொல்மூலம் மருதநிலத் தலைவன் குறிப்பிடப்படுகிறான்?

(ஆ) இது யாரது கூற்றாக அமைந்துள்ளது?

(x) “பெரிது இனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவது ஒன்று இல்”

(அ) பீழை என்பதன் பொருளை எழுதுக.

(ஆ) இக்குறட்பாவைக் கொண்டு கூட்டி எழுதுக.

(02 x 10 = 20 புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைநடைப் பகுதிளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.

(i) வயிரம் எனும் சுடு நெருப்பை மிகமூட்டி
வளர்க்கின் உயர்வரைக்காடு என்ன
செயிர் அமரில் வெகுளி பொரச்சேரஇரு
திறத்தேமும் சென்று மாள்வோம்
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டில் கலந்துவாழ
உயிரினையாய் சந்துபட உரைத்தருள்என்றான்
அறத்தின் உருவம் போல்வான்.

(அ) இப்பாடலில் தருமனின் எதிர்பார்ப்பு யாது?

(ஆ) “கயிரவமும் தாமரையும் கமழ் பழனக்குருநாடு” என்றதொடரின் சிறப்பை விளக்குக.

(ii) *சீனத்துச்செப்பே என்ர - சிங்காரப் பூ நிலவே*
*வானத்தப்பார்த்து மச்சி வாடுவது என்னத்திற்கோ?*
*ஓதிப்படிச்சி ஊர் புகழ வாழ்ந்தாலும்*
*ஏழைக்குச் செய் தீங்கை - அல்லா எள்ளளவும் ஏற்கமாட்டான்.*

*(அ) காதலியின் சிறப்பு எவ்விதம் வெளிப்படுத்தப்படுகிறது?*

*(ஆ) காதலியின் துன்பத்தைத் தலைவன் எவ்வாறு நீக்க முற்படுகிறான்.*

(iii) காத்திருந்தவள் போம்வழிமுற்றிலும்
கண்கள் பின்னழகார்ந்து களித்திட
யாத்த தேருருளைப்படு மேழைதான்
யாண்டு தேர்செலு மாங்கிழுப்புற்றென
கோத்த சிந்தனையோடேகி யதில் மகிழ்
கொண்டு நாட்கள்பல கழிந்திட்டனன்
பூத்தஜோதி வதனந் திரும்புமேல்
புலனழிந்தொரு புத்துயி ரெய்துவேன்.

*(அ) பாரதியின் காதலுணர்வின் உச்சநிலை இப்பாடலில் எவ்வாறு புலனாகிறது?*

*(ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.*

(iv) *காட்சிப் படிமங்களின் மூலம் மட்டுமே பொறாமை, எரிச்சல், அதிருப்தி, பொறுமையின்மை எனும் மனித மனதின் வெவ்வேறு நிலைகளை ஹிட்ச்சாக் காட்டினார். க ாட்சிப் படிமங்கள் மூலம் கதை சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூறமுயன்றால் அங்கே சினிமா சீரழிகிறது என்கிறார் ஹிட்ச்சாக். தமிழ் சினிமாவில் காட்சிப்படிமங்களால் கதைசொல்லும் முறை சரியாக வளரவில்லை.*

*(அ) காட்சிப் படிமம் மூலம் மனித மனத்தின் எத்தகைய நிலைகளைக் காட்டலாம் என்று கூறப்பட்டுள்ளது?*

*(ஆ) சினிமா எப்போது சீரழிகிறது என்று கூறப்படுகிறது?*

(v) *உலக நீதியிலக்கியங்களைச் சிறப்பாக ஆராய்ந்து அரும்பெரும் நூல்களை இயற்றிய அல்பேட் சுவைட்சர் எனும் மகாத்மா திருக்குறளைப் பற்றி எழுதும்போது திருக்குறளைப் போல் உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட ஒரு நூலை இவ்வுலகிற் காண்பது அரிது என்று குறிப்பிட்டுள்ளார், திருக்குறளை அவர் ஜேர்மன் மொழியிற் படித்தார். தமிழ்மொழியில் அதனைப் படித்திருந்தால் இன்னும் பன்மடங்கு அதிகமாக அதன் புலமையை அறிந்திருப்பார்.*

*(அ) அல்பேட் சுவைட்சரின் சிறப்பு எவ்வாறு வெளிப்படுத்தப்டுகிறது?*

*(ஆ) சுவைட்சர் திருக்குறளின் புலமையை முழுமையாக அறியமுடியாமைக்கான காரணம் யாது?*

(04 x 05 = 20 புள்ளிகள்)

3. **இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையில்

(அ) சத்தியத்தை இலட்சியமாகக் கொண்ட இலட்சிய வாதிகளின் சிறப்பு

(ஆ) காதல் இலட்சியம்

என்பவை விளக்கப்பட்டிருக்குமாற்றைத் தெளிவுபடுத்துக.

**அல்லது**

**எது நல்ல சினிமா** என்ற கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு

(அ) சினிமா மொழிகளைக் குறிப்பிட்டு எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

(ஆ) தமிழ்நாட்டில் ஆரோக்கியமான சினிமா மலரமுடியாமைக்கான காரணங்களை ஆராய்க.

(15 புள்ளிகள்)

4. **குற்றாலக் குறவஞ்சியில்**

(அ) நாட்டு வளம்

(ஆ) குற்றால நாதரின் சிறப்பு

என்பன கூறப்பட்டிருக்கும் விதம்

**அல்லது**

**தத்தைவிடுதூதில்**

(அ) பெண்களது சுதந்திரம் பறிக்கப்பட்டமை

(ஆ) காதலி பற்றிய வர்ணனை

என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

- **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒன்றை** மட்டும் தெரிவுசெய்து விடை எழுதுக.

5. **தேயிலைத் தோட்டத்திலே** என்ற கவிதையில்

(அ) தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வின் அவலம்

(ஆ) மனிதர்கள் மீதான கவிஞரின் வெறுப்புணர்வு

என்பவற்றை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

6. **கம்பியூட்டர்** என்ற சிறுகதையினை அடிப்படையாகக்கொண்டு

(அ) கணினிப்பொறியின் வருகையினால் கதாசிரியரது இல்லத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிக் குறிப்பிடுக.

(ஆ) இச்சிறுகதையில் உள்ள உவமைத்தொடர்கள் பத்தினை (10) எழுதுக.

(10 புள்ளிகள்)

7. **இனி நினைந்திரக்கமாகின்று** எனும் புறநானூற்றுப் பாடலில்

(அ) இளமைக்காலச் செயல்கள்

(ஆ) முதுமைப் பருவம் பற்றிய உணர்வுகள்

என்பவை விளக்கப்படுமாறு

(10 புள்ளிகள்)

***